பக்கங்கள் – 16
விலை – ரூபா 50
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 40
கதிர் : 50
புதன்கிழமை
15 ஜனவரி 2025
தை 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056
புதன்பொய்கை

## வடக்கில் கனமழை

யாழ்., ஜன. 15
ஜனவரி மாதம் 7ஆம் திகதி உருவாகிய காற்றுச் சுழற்சி தற்போது மாத்தறைக்குத் தென் மேற்குத் திசையில் நகர்வதால், வடக்கு மற்றும்

15

# 13ஆவது திருத்தத்தில் கைவைக்கமாட்டோம்!

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தமிழகத்தில் தெரிவிப்பு!



**கொழும்பு, ஜனவரி 15**
**அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை தமிழ் மக்கள் தமக்குக் கிடைத்த உரிமையாகக் கருதுகின்ற நிலையில் அதில் கைவைப்பதற்கு நாங்கள் முனையவில்லை என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.**

15

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## 6,000 போலி முகவர்கள் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடுகள்

கொழும்பு, ஜன. 15
பதிவுசெய்யப்படாத போலியான 6 ஆயிரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று வெளிநாட்டு வேலை

15

## அநுர விதித்துள்ள கட்டுப்பாடு வடகொரியாவில்கூட இல்லை

### தயாசிறி ஜயசேகர காட்டம்

கொழும்பு, ஜன. 15
இலங்கையில் அமைச்சர்கள் மற்றும் ஆளுநருக்கு ஜனாதிபதியால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் வடகொரியாவில்கூட இல்லை என்று நாடாளுமன்ற உறுப்

15

ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி

## செல்வம் எம்.பி.க்கு தலைமைப் பதவி?

வவுனியா, ஜன. 15
ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் தலைவராக செல்வம் அடைக்கலநாதனை நியமிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

15

## பயிர் அழிவுகளுக்கு இம்மாதம் இழப்பீடு!

கொழும்பு, ஜன. 15
நவம்பர் மாதம் இறுதிப் பகுதியில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடருக்கான இழப்பீடுகள் இம்மாத இறுதிக்குள் வழங்கப்படும் என்று கமநலக் காப்பீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

15

சீனாவில்

## ஜனாதிபதி அநுரவுக்கு மகத்தான வரவேற்பு

பீஜிங், ஜன. 15
சீன ஜனாதிபதி ஜின் பிங்கின் அழைப்பின் பேரில், சீனாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரவுக்கு அங்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.
சீன நேரப்படி நேற்று மு.ப. 10.25 மணியளவில் பீஜிங் சர்வதேச விமான நிலையத்தை அடைந்த ஜனாதிபதி அநுரவுக்கு அங்கு இராணுவ

15



## தோட்டத் தொழிலாளர்களுக்கு இனி மாதாந்த ஊதியம்?

### சாத்தியங்கள் ஆராயப்படுவதாக பெருந்தோட்ட அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 15
தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போதைய நாளாந்த ஊதிய முறைமையில் இருந்து மாதாந்த ஊதிய முறைமைக்கு மாறுவதற்கான சாத்தியங்கள் ஆராயப்பட்டு வருகின்றன என்று பெருந்தோட்ட அமைச்சு அறிவித்துள்ளது.
பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்புப் பிரதியமைச்சர் சுந்தர

15

## இஸ்ரேலியப் படையினருக்கு விசா வழங்கவேண்டாமாம்!

ஜனாதிபதி அநுரவிடம் வலியுறுத்து

» 15

## சட்டச்சிக்கல் தீர்ந்தால் மாகாணசபைத் தேர்தல்

» 02

## அரசியல்கைதிகளென நாட்டில் எவருமில்லை

### நீதி அமைச்சர் ஹர்ஷன தெரிவிப்பு



கொழும்பு, ஜனவரி 15
இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகளென எவரும் இல்லை என்று நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் உள்ள எந்தவொரு சிறைகளிலும் அரசியல்கைதிகள் என்றொருவரும் இல்லை.
ஆனால் பயங்கரவாதத் தடைச்சட்டத்

15

முச்சந்தி முரளி



'உந்த மழைக்கு எங்களை விட்டிட்டுப்போக மனமில்லைப் போல'

## கடும் காற்றால் கரையோரங்கள் மிக அவதானம்

» 05

## காணாமலாக்கப்பட்டோருக்காக அமெரிக்காவே உடன் வருக!

» 08

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டச் சிக்கல் தீர்க்கப்பட்டால் உடனே மாகாணசபைத் தேர்தல்

## தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.15**

**மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் உறுதியான தீர்மானத்தை விரைவாக எடுக்கவேண்டும் என்று அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம். மாகாணசபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு கண்டால், உள்ளூராட்சிமன்றத் தேர்தலைத் தொடர்ந்து மாகாணசபைத் தேர்தலையும் நடத்தமுடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது. சட்டவரைவை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஒருவேளை சட்டமூலம் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டால் நீதிமன்றத்தின் வியாக்கியானம் கிடைக்கும் வரை காத்திருக்கவேண்டும்.

நீதிமன்றத்தின் வியாக்கியானத்துக்கு அமைய சட்டவரைவு வெகு விரைவாக நிறைவேற்றப்பட்டால் புதிய திருத்தத்துக்கு அமைய தேர்தலுக்கான பணிகளை முன்னெடுத்து வேட்புமனுத்தாக்கலைக் கோருவோம். சட்டவரைவு நிறைவேற்றப்பட்டதன் பின்னரே அடுத்தகட்டப் பணிகளுக்குத் திகதி தீர்மானிக்கமுடியும்.

மாகாணசபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு காணுமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம். தேர்தல் முறைமை தொடர்பில் தெரிவுக்குழுக்களிடம் எமது யோசனைகளை முன்வைத்துள்ளோம். காணப்படும்சட்டச்சிக்கலுக்குதீர்வுகண்டால் உள்ளூராட்சிமன்றத் தேர்தலைத் தொடர்ந்து மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியும்.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் அனைத்து அரசியல் கட்சிகளுடன் வெளிப்படைத்தன்மையுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாராகவுள்ளோம். காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம் - என்றார். (எ-இ)

# மீனவர்கள் பிரச்சினை தீர்வுகாண நடவடிக்கை

## சிறீதரன் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜன.15

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் முதலமைச்சருடன் பேசுவதற்கு சந்தர்ப்பம் கேட்டுள்ளேன். வெகுவிரைவில் இந்தச் சந்திப்பு இடம்பெறும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சிக் கிளையின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் நிகழ்வு கிளிநொச்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் வடக்கு மீன்வளங்கள் சூறையாடப்படுவதுடன் எமது மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது.

தமிழக அரசின் அழைப்பின் அயலகத்தமிழர் தின நிகழ்வில் அண்மையில் கலந்துகொண்டபோது அது தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு தமிழக முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தேன். விரைவில் இது குறித்து தமிழக முதல்வருடன் பேச்சு நடத்தித் தீர்வை எட்டுவதற்கு வழிவகுப்பேன்- என்றார். (ச-33-113)

# 5 அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்கள்

கொழும்பு, ஜன.15

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனா பயணித்துள்ள நிலையில், ஐந்து அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கீழ் உள்ள மூன்று அமைச்சுக்களான டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய 3 அமைச்சுக்களுக்கும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு என்பவற்றுக்கும் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டிஜிட்டல் பொருளாதார பதில் அமைச்சராக டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் பொறியியலாளர் எரங்க வீரரத்னவும், பாதுகாப்பு பதில் அமைச்சராக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகரவும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராக நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராக வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பதில் அமைச்சராக மருத்துவர் பிரசன்ன குணசேனவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஞ-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 09 . 1938 — மறைவு 12 . 01 . 2025

### துரைராஜா தவமணி

நவாலி வடக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா தவமணி அவர்கள் கடந்த 12.01.2025 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - அன்னமுத்து தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற துரைராஜா அவர்களின் அன்பு மனைவியும், ரவிச்சந்திரன் (DGM - Baurs & co, Colombo Srilanka), புவிச்சந்திரன் (பொறியியலாளர் - லண்டன்), ரூபிச்சந்திரன் (கணக்காளர் - அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நளாயினி (கொழும்பு), சிவாஜினி (லண்டன்), நிரூபா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், துவாரகன் - சர்மினி, சிவேன், சியாம், தனுஷ், சுவாத்தி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், கணேசன், காலஞ்சென்ற தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 788 8325

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(CS/2277) J-1

சுபிரி தன சம்பத — திகதி 14.01.2025 — தினம் செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 0424
DLB — ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கம் 3 2 6 3 7 4

Super Ball DLB — திகதி 14.01.2025 — தினம் செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2690 — ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கம் 40 63 67 68

சனிதா DLB — திகதி 14.01.2025 — தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கம் 02 10 50 51 — வெற்றி வாரம் 4851

SASIRI DLB — திகதி 14.01.2025 — தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0600 — வெற்றி இலக்கம் 04 23 25

லக்ன ராசி — திகதி 14.01.2025 — தினம் செவ்வாய்க்கிழமை
மகரம் — வெற்றி இலக்கம் 20 44 47 61 — சீட்டிழுப்பு வாரம் 4402
DLB

KAPRUKA DLB — திகதி 14.01.2025 — தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து Q — சுப்பர் இலக்கம் 28 — வெற்றி இலக்கம் 01 15 41 59 — வெற்றி வாரம் 1866

அத கோடிபதி DLB — திகதி 14.01.2025 — தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கம் 18 21 31 73 — வெற்றி வாரம் 2516

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டவரைவில் பல திருத்தங்கள்

அரசாங்கத்துடன் கலந்துரையாட எதிர்பார்க்கின்றது எதிர்க்கட்சி



**கொழும்பு, ஜன.15**

**உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டவரைவில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டி இருக்கின்றன. அவை தொடர்பில் அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்க்கிறோம் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான சட்டவரைவு கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 ஆயிரமாகக் காணப்படுகிறது. இந்த எண்ணிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8 ஆயிரத்தில் இருந்து 5 ஆயிரமாகக் குறைக்கப்படவேண்டும் என்ற யோசனையை முன்வைக்க இருக்கிறோம். இதுபோன்று உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் என இன்னும் 10க்கும் அதிகமான யோசனைகள் எம்மிடம் இருக்கின்றன.

தற்போதுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முறைமை அவசரத்தில் மேற்கொள்ளப்பட்டதாகும். அதில் பல திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதனால் அரசாங்கம் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முறைமையில் திருத்தம் மேற்கொள்ளத் திட்டம் ஒன்றை அமைத்து, அது தொடர்பில் கலந்துரையாட எங்களுக்கும் அழைப்பு விடுக்கவேண்டும் எனக் கேட்கிறோம் - என்றார். (எ-இ)

# அந்நியச் செலாவணி நெருக்கடி விரைவில்

கொழும்பு, ஜன.15

நாட்டில் வங்கிக் கடன்களுக்கான வட்டி விகிதங்கள் குறைவாக இருக்கும் நேரத்தில், கட்டுப்பாடு இல்லாமல் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டால் மீண்டும் அந்நியச் செலாவணி நெருக்கடி ஏற்படக்கூடும் என்று பொருளாதார ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். நாட்டின் வர்த்தக சமநிலையை நேர்மறையான மதிப்பில் பராமரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

துப்பாக்கி முனையில்

# யுவதி கடத்தல்; சிறுவர்கள் கைது

கொழும்பு, ஜன.15


கேகாலையில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டி யுவதியைக் கடத்திச்சென்ற குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடத்திச் செல்லப்பட்ட யுவதியின் தாயார் தெரணியகலப் பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 17 மற்றும் 19 வயதுடையவர்களாவர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

கறுப்புப்பட்டியலிலுள்ள

# நிறுவனத்துடன் ஒப்பந்தமில்லை



கொழும்பு, ஜன.15

வாய் சுத்தப்படுத்தும் மருந்தை விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரம், கறுப்புப்பட்டியலில் உள்ள ஒரு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கொள்முதல் குழு அந்தக் கேள்விப் பத்திரத்தை வழங்குவதற்குத் தீர்மானித்திருந்த போதிலும் அதன்பின்னரான பின்தொடர்தல் செயல்முறையின்போது, குறித்த விநியோகஸ்தர் பணம் செலுத்துவதற்குத் தவறியிருந்தமை தொடர்பில் பணிப்பாளர்கள் குழாமினால் அடையாளம் காணப்பட்டிருந்தது.

அதன்படி, குறித்த கேள்விப்பத்திரத்தை இரத்துச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# 20-30 வீதம் குறைக்கலாம்

கொழும்பு, ஜன.15

மின்சாரக் கட்டணம் 20 முதல் 30 சதவீதத்துக்கு இடைப்பட்ட அளவில் குறைக்கப்படவேண்டும் என மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட பொதுமக்களின் கருத்தறியும் நடவடிக்கையின்போது யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு கடந்த டிசெம்பர் 27ஆம் திகதி முதல் கடந்த 10ஆம் திகதிவரை மாகாண மட்டத்தில் பொதுமக்களின் கருத்துகள் மற்றும் யோசனை பெறும் செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தது.

இந்தநிலையில், தற்போது பொதுமக்களின் கருத்துக்கள் பெறப்பட்டுள்ள நிலையில், இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இறுதித் தீர்மானம் இந்த வாரத்தினுள் அறிவிக்கப்படும் எனக் கூறப்படுகின்றது. (ச-இ)




**போன**முறைபொங்கலுக்குதோரணங்களைக் கூட காசு குடுத்து வாங்கிற அளவுக்கு நிலைமை வந்திட்டுது எண்டு எல்லாரும் கவலைப்பட்டம். ஆனால் இந்தமுறை அந்த நிலைமையில கடும் முன்னேற்றம். போன வருசம் தோரணத்தை மட்டும்தான் வித்திச்சினம், இந்தமுறை என்னெண்டால் மெழுகிறதுக்கு மாட்டுச்சாணம், பிள்ளையார் பிடிக்க அறுகம்புல் எல்லாம் விக்கத் தொடங்கிட்டினம். சாணத்தை எல்லாம் அடிச்சுப் பிடிச்சு சனங்கள் வாங்கிக்கொண்டு போனதெல்லாம் கண்கொள்ளாக்காட்சிதான்.

என்னநோக்கத்துக்காகத் தைப்பொங்கலைக் கொண்டாடுறம் எண்டதையே கனபேர் மறந்ததால தான் இப்பிடி சாணம், அறுகம்புல்லைக் கூட காசு குடுத்து அடிபிடிபட்டு வாங்கிற அளவுக்கு வந்திட்டம். எங்கட காணி, கழனியில விளைஞ்சதுகளையும், அங்கை கிடைக்கிறதையும் வைச்சுத்தான் சூரியனுக்கு முந்தியெல்லாம் பொங்கிறவை. ஏனெண்டால் அதுகள் விளையிறதுக்கும், எங்களைப் பசியில்லாமல் வைச்சிருக்கிறதுக்கும் சூரியன்தானே முழுக்காரணம். அதால என்னென்னவெல்லாம் சூரியனால எங்களுக்குக் கிடைச்சதோ, அதுகளை வைச்சே நன்றி சொல்றது தானே முறை. இவ்வளவுநாளும் அப்பிடித்தான் நடந்தும் வந்தது. ஆனால் இப்ப கொஞ்சக் காலமா எல்லாம் தலைகீழா மாறிட்டுது. பானை, அகப்பை, சீனவெடி எண்டதுகளை மட்டும் கடையளில வாங்கின ஆக்களெல்லாம் இப்ப அடுப்பில இருந்து அறுகம்புல் வரைக்கும் கடையில வாங்கிச் செய்யிற பொங்கல் சூரியனுக்கே பிடிக்காது. எங்கட வாழ்க்கை முறை மாறினதும், எல்லாரிட்டையும் கண்டபடி காசு புழங்கத் தொடங்கினதும், பஞ்சிக்குணம் கூடினதும் தான் உதுக்கெல்லாம் காரணம்.

முந்தி அப்பிடியில்லைத்தானே. எல்லாரும் உடம்பை முறிச்சு வேலை செய்தினம். எல்லா வீட்டையும் எப்பவும் பெட்டகங்களில் நெல்லு நிறைஞ்சுபோய்க்கிடக்கும். ஆடு, மாடுகள் நாலைஞ்சுக்குக் குறையாமல் வளர்ப்பினம். அதை விட தோட்டம், துரவு எண்டு எல்லாம் வைச்சிருப்பினம். அவையவையின்ர சாப்பாட்டுக்கெண்டு வெளியில ஒரிடமும் போகத்தேவையில்லை. எல்லாமே வீட்டுக்கையும், காணிக்கையும் இருக்க கடைகண்ணிக்கு போகவேண்டிய அவசியம் இல்லைத்தானே. அதுக்குப் பிறகு உலக்கை தேய்ஞ்சு உளிப்பிடியான மாதிரி காணி, கழனி, தோட்டம், ஆடுமாடு எல்லாம் குறைஞ்சு குறைஞ்சு கடைசியா இப்ப சாணத்தைக்கூட சந்தையில வாங்கித்தான் வீட்டு முத்தத்தை மெழுகிப் பொங்கவேண்டிய நிலைக்கு வந்திட்டம். இந்தநிலை இப்பிடியே போனால், வாற வருசம் பொங்கி வைச்ச புக்கையைக் கூட காசுக்கு வாங்கிக் கொண்டந்து சூரியனுக்குப் படைக்கிற நிலையும் வரலாம். எங்கட உற்பத்தியளை நாங்கள் கைவிட்டுட்டு எல்லாத்தையும் இறக்குமதி செய்யிற இலங்கையின்ர பொருளாதாரம் மாதிரித்தான் எங்கட வீடுகளும் மாறிக்கொண்டிருக்கு. இதெல்லாம் நல்லதுக்கில்லை. வெளிநாட்டுக்காசுக்கு ஆப்பு வரேக்கதான் நாங்கள் விட்ட பிழை தெரியும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய



**மேடம்:** துணிச்சலாக முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும். புதிய முயற்சி சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி உண்டாகும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.



**இடபம்:** மனதில் அடிக்கடி குழப்பம் ஏற் படக்கூடும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சில ருக்கு பிள்ளைகளால் தர்மசங்கடமான நிலைமை ஏற்படக் கூடும். அலு வலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.



**மிதுனம்:** உற்சாகமான நாள். எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு வெளியூரில் உள்ள கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக் கூடும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் சிலருக்குக் கிடைக்கும்.



**கடகம்:** புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படக்கூடும்.



**சிம்மம்:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக் கொள்வார்.



**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.



**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். கணவன் மனைவிக்கிடையே வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை யைக் கடைப்பிடிக்கவும்.



**விருச்சிகம்** : இன்று எந்த விஷயத்திலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சிகள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.



**தனுசு:** மனதில் தைரியமும் தன்னம் பிக்கையும் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனு கூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கும்.



**மகரம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். முக்கி யப் பிரமுகர்களின் தொடர்பும், அதனால் அனுகூலமும் உண்டாகும். மூத்த சகோ தரர்கள் ஆதரவாக இருப்பார்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.




**கும்பம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை.



**மீனம்:** காரியங்களில் தடை, தாமதம் உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை. புதிய முயற்சி களில் ஈடுபட வேண்டாம். சிலருக்குக் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

# நோய்த்தாக்கங்களால் அறுவடையில் வீழ்ச்சி!

## விவசாயிகள் கவலை



முல்லைத்தீவு , ஜன. 15

காலபோக நெற்செய்கையில் ஒருவகை நோய்த்தாக்கம் ஏற்படுவால் அறுவடை வீழ்ச்சிகண்டுள்ளது என்று முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் விவசாயிகள் கவலை வெளி யிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட் பட்ட முத்தையன் கட்டுக்குளத்தின் கீழான கனகரத் தினபுரத்தில் சுமார் 400 ஏக்கர் நிலப்பரப்பில் இம்முறை நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

காலபோக நெற்செய்கை காலநிலை மாற்றம், நோய்த்தாக்கங்கள் மற்றும் யானைகளின் தாக்கம் என்பவற்றால் அழிவைச் சந்தித்துள்ளது.

கனகரத்தினபுரத்தில் நோய்த்தாக்கம் பரவல டைந்து காணப்பட்டுள்ளதால் அறுவடையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. நெல்லுக்கான சரி யான விலை இல்லாததினால் ஒரு ஏக்கருக்கு 15 ஆயிரம் வரையில் வெட்டுக்கூலி ஏற்படுகின்றது. தனியார் துறையினரே நெல்லைக் கொள்வனவு செய்கின்றார்கள். ஏக்கருக்கு 15 தொக்கம் 20 வரையான பை நெல்லே அறுவடையாகக் கிடைக் கின்றது. அறுவடை செய்த நெல்லினைக் காய வைத்துக் கொடுப்பது என்றாலும் ஒருநாள் ஒரு மனித கூலி மூவாயிரம் ரூபாவாகக் காணப்படுகின் றது. எனவே அரசாங்கம் விவசாயிகளின் இந்த நிலையைக் கருத்திற்கொண்டு நெல்லுக்கான விலையை நிர்ணயிக்கவேண்டும் என்றும் விவசா யிகள் சுட்டிக்காட்டினர். (ச-19)





# கௌரவிப்பும் கலைநிகழ்வும்

கொடிகாமம், ஜன. 15


வரணிக் குடும்ப முன்பள்ளி மாணவர்களின் கௌரவிப்பும் கலைநிகழ்வும் வரணிக் குடும்ப இணைப்பாளர் திருமதி லோ.கேதிகா தலைமை யில் வரணி சிட்டிபுரம் கண்ணகை அம்மன் கோவி லுக்கு முன்புறமாக அமைந்துள்ள கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை அதி பர் ஆ.தங்கவேலு, சிறப்பு விருந்தினர்களாக கைதடி சித்த வைத்தியசாலை வைத்தியர் வி.மிறாஜ், வரணி பனை தென்னை வளங்களின் கொத்தணி முகாமையாளர் க.அருட்செல்வம், கௌரவ விருந் தினர்களாக வரணிகலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி ஜெ.கிரிதரன், வரணி மண்ணின் சமூக சேவையாளரும் முன்னாள் பிரதேசசபை உறுப்பினருமான சி.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25, 159)

# வவுனியா ஆலயங்களில் தைப்பொங்கல் வழிபாடு

உழவர் திருநாளான தைப்பொங்கல் தினத்தை முன் னிட்டு வவுனியாவில் இந்து ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்று இடம்பெற்றன. வவுனியா வின் பிரதான ஆலயங்களில் ஒன்றாகிய கந்தசாமி ஆலயத்தில் புதுப்பானையில் புத்தரிசி இட்டுப் பொங்கல் இடம்பெற்றதுடன், ஆலயப் பிரதமகுரு தலைமையில் விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெற்றன. (ச-110)





வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம் மன் ஆலயத்தின் வருடாந்தத் தைப்பொங்கல் உற்சவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை சிறப்பாகவும் பக்திபூர்வமா கவும் இடம்பெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேட்பாளர்களுக்கான விமானசேவையால் ரூ.56 மில். இலாபம்

**கொழும்பு, ஜன. 15**

**2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான ஆகாயவழிப் போக்குவரத்து சேவைகளை வழங்கியதன் மூலம் இலங்கை விமானப்படையால் 56 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.**

இலங்கை விமானப்படையிடமிருந்து தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கோரப்பட்ட தகவல்களுக்கு அமைவாக ஆங்கில ஊடகமொன்று இவ்விடயத்தை வெளிப்படுத்தியுள்ளது.

தேர்தல் பிரசாரங்கள் நிறைவடையும் வரையில் இலங்கை விமானப்படையினால் 34 நாள்கள் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான ஆகாயவழிப் போக்குவரத்துக்கான சேவைகள் வழங்கப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 23 தடவைகள் போக்குவரத்துச் சேவையைப் பெற்றுக் கொண்டுள்ளதோடு அதற்காக 29.09மில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் 11 தடவைகள் சேவை பெறப்பட்டுள்ளதோடு அதற்காக 20.75 மில்லியன் ரூபா அறவிடப்பட்டுள்ளது.

நாமல் ராஜபக்ச இரண்டு தடவைகள் சேவையைப் பெற்றுள்ளதோடு 1.44 மில்லியன் ரூபா அறவிடப்பட்டுள்ளது. மேலும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இரண்டு தடவைகள் சேவையைப் பெற்றுள்ளதோடு அதற்காக 2.68 மில்லியன் ரூபாவை வழங்கியுள் ளார்.

அதேநேரத்தில் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஒரு தடவை சேவையைப் பெற்றுக் கொண்டதோடு அதற்காக 1.24 மில்லியன் ரூபாவையும் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஒரு தடவை சேவையைப் பெற்றுள்ளதோடு அதற்காக 1.6 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளார்.

இருப்பினும், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரும் அதன் தலைவருமான தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பிரசாரத்தின்போது ஆகாயவழிப் போக்குவரத்து சேவையைப் பயன்படுத்தவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மக்களைப் பட்டினியிட்டு தூய்மையாக்க முடியாது

### சந்திரசேன தெரிவிப்பு

கொழும்பு, ஜன.15

நாட்டு மக்களைப் பட்டினியில் வைத்துக் கொண்டு நாட்டைத் தூய்மைப்படுத்தமுடியாது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பச்சை அரிசியை இலவசமாக மக்களுக்கு வழங்கியதாலேயே அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று கூறுவது சிறுபிள்ளைத் தனமானது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வாய்ச்சொல் வீரரே தவிர, செயல் வீரரல்ல என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டோம். நாட்டு மக்கள் புதிய மாற்றத்தை எதிர்பார்த்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். மக்களின் எதிர்பார்ப்பு தோல்வியடைந்துள்ளது.

விவசாயம் செழிக்க வேண்டும் என்பதற்காகவே தமிழர்கள் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள், ஆனால் இம்முறை பொங்கல் பொங்குவதற்கும் பச்சையரிசி இல்லை. நாட்டு மக்களை பட்டினியில் வைத்துக் கொண்டு நாட்டைத் தூய்மைப்படுத்த முடியாது - என்றார். (எ-இ)

## கிணற்றில் வீழ்ந்து குழந்தை சாவு

கொழும்பு.ஜன.15

இரண்டு வயதுப் பெண் குழந்தை கிணற்றில் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு ஏறாவூரில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஏறாவூர் இரண்டாம் பிரிவு மக்காமடி வீதியைச் சோந்த முகமட் ஷரீர் ஜப்பிரா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

## சிறுமி துஷ்பிரயோகம் தம்பதியர் கைது

முல்லைத்தீவு , ஜன.15

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதியில் சிறுமி ஒருவரை வைத்து பாலியல் தொழில் நடத்திவந்த குற்றச்சாட்டில் குடும்ப பெண் ஒருவரும், அவரது கணவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த 14 வயது சிறுமியையே மூன்று மாதங்களாக இந்தக் குற்றச்செயலில் குறித்த தம்பதியர் ஈடுபடுத்தியுள்ளனரென விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த சிறுமியிடம் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி மருத்துவமனைப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், குறித்த சிறுமிக்கும் கிளிநொச்சியில் ஒரு பெண்ணுக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. பின்னர் அந்தப் பெண் மூலமாக புதுக்குடியிருப்புப் பெண்ணுக்கும் சிறுமிக்கும் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு சிறுமிக்கு பண ஆசையைக் காட்டி பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## வருகின்றது டிஜிற்றல் ஐ.டி.

கொழும்பு, ஜன.15

இந்தமாதம் முதல் டிஜிற்றல் அடையாள அட்டையை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக டிஜிற்றல் பொருளாதாரப் பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

புதிதாக வழங்கப்படும் அனைத்து அடையாள அட்டைகளும் டிஜிற்றல் மயமாக்கப்படும் .

அடையாள அட்டைகளைப் பெறுவதில் ஏற்கனவே குறிப்பிடத்தக்க தாமதம் ஏற்பட்டுள்ளதால், அதனை நிவர்த்திசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## பலத்த காற்று வீசக்கூடும்

கொழும்பு, ஜன.15

நாட்டின் கரையோரப் பிரதேசங்களில் பலத்த காற்றும் கடல் கொந்தளிப்பும் இருக்கும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பிலிருந்து புத்தளம் மற்றும் மன்னார் வழியாக காங்கேசன்துறை வரையிலான கடற்கரைக்கு அப்பால் உள்ள கடல் பகுதிகளுக்குச் செல்பவர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மீனவர்கள் மற்றும் கடல்சார் சமூகத்தினர் கவனம் செலுத்துமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. (ச-இ)

## வீதியைத் துப்புரவு செய்வதால் நாட்டைத் தூய்மையாக்கமுடியாது

### சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 15

ஜனாதிபதியின் 'க்ளீன் ஸ்ரீலங்கா' செயற்திட்டம் வெற்றிபெறவேண்டுமாயின் ஒட்டுமொத்த மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தினால் மாத்திரமே அதன் இலக்கை அடையமுடியும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் 'க்ளீன் ஸ்ரீலங்கா' செயற்திட்டம் சிறந்தது. அரசியல் நோக்கத்துக்கு இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தக்கூடாது. நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் மக்கள் மத்தியிலிருந்து புதிய மாற்றங்கள் தோற்றம்பெறவேண்டும்.

சிங்கப்பூர் நாட்டில் 'க்ளீன் செயற்திட்டம்' ஆரம்பமானபோது அரசாங்கத்துக்கு அந்த நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## கடாபி சிக்கினார்

கொழும்பு, ஜன.15

சிறைச்சாலை பஸ்ஸிலிருந்து தப்பிச்சென்ற 'கடாபி' என்ற நபர் 15 ஆண்டுகளுக்குப்பிறகு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு சிறைச்சாலை பஸ்ஸிலிருந்து தப்பிச் சென்ற உபேகா சந்திரகுப்தா எனப்படும் கடாபி தேடப்பட்டு வந்துள்ளார்.

இந்தநிலையில் அவர் பிலியந்தலையிலுள்ள வீடொன்றில் மறைந்திருந்தபோது அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தா ஆட்சியில் ஜனாதிபதி ஊடகப் பிரிவில் முறைகேடுகள்

கொழும்பு, ஜன.15
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய காலத்தில் ஜனாதிபதி ஊடகப் பிரிவில் மிகப்பெரிய முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் உபகரணங்கள் பெருந்தொகையில் காணாமல் போயுள்ளன.

அது தொடர்பில் நாங்கள் உள்ளகக் கணக்கெடுப்பு மற்றும் கணக்காய்வு ஒன்றையும் மேற்கொண்டு, உபகரணங்களையும் தனித்தனியாகப் பரிசோதித்து, ஜனாதிபதி செயலாளருக்கும் அறிவித்துள்ளோம். அதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## பைடன் இன்று பிரியாவிடை!

அமெரிக்க அதிபர் பைடன், இன்று நாட்டு மக்களுக்கு பிரியாவிடை உரையாற்றுவார் என்று வெள்ளைமாளிகை அறிவித்துள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி ட்ரம்ப் அமெரிக்காவின் அதிபராகப் பொறுப்பேற்கவுள்ளார். ஜனவரி மாதம் 19ஆம் திகதியுடன் பைடன் வெள்ளைமாளிகை விட்டுவெளியேறுவார் என்று கருதப்படும் நிலையிலேயே, அவர் நாட்டு மக்களுக்கு இன்று உரையாற்றவுள்ளார். (ம)

**அறைகள் வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் பெண்கள் தங்குவதற்கான அறைகள் (Rooms) வாடகைக்கு விடப்படும்.

(CS2778) J-1

**077 737 4972, 077 737 4970**

**பணியாளர்கள் தேவை**

யாழ்ப்பாணம் அரியாலை கிழக்கில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒன்றிணைந்த பண்ணை ஒன்றில் தங்கியிருந்து வேலை செய்ய பணியாளர்கள் தேவை.

- சமையல்
- தோட்டவேலை
- கால்நடைகளை பராமரித்தல்
- கோழி வளர்ப்பு

தங்குமிடம் மற்றும் உணவு நீங்கலாக சிறப்பான ஊதியம் வழங்கப்படும்.

(CS29576) J-1

**076 319 8312, 074 251 4129**

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



தோற்றம் : 26.05.1931 மறைவு : 17.12.2024

### அமரர் தங்கம்மா பொன்னம்பலம்


அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் துர்க்கா பவனம், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா பொன்னம்பலம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (15.01.2025) புதன்கிழமை அதிகாலை 05.30 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (16.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளன.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு எங்கள் துக்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

துர்க்கா பவனம்,
மல்லாகம்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



மலர்வு
17.08.1943

உதிர்வு
12.01.2025

## திரு.கதிரிப்பிள்ளை பொன்னம்பலம்

### (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

ஆவரங்காலை பிறப்பிடமாகவும், மாலிசந்தியை வாழ்விடமாகவும், இல.25 இராஜசிங்கம் றோட், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை பொன்னம்பலம் அவர்கள் 12.01.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலம் சென்ற கதிரிப்பிள்ளை, நாகம்மா தம்பதியினரின் அன்பு புதல்வனும், காலம் சென்ற கந்தையா, சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும், வள்ளிநாயகி அவர்களின் அன்பு கணவரும்,காலம் சென்ற சசிகரன், கிருபாகரன் (கனடா), நந்தினி (கனடா), வனஜா (கனடா), தேவிகா (கனடா) ஆகியோரின் அன்பு தந்தையும், ஆனந்தசிவம் (கனடா), செந்தில்குமரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிலக்ஷனா, கனிஷன், திவிஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலம் சென்றவர்களான இராமலிங்கம், நாகம்மா, சிவக்கொழுந்து, இராஜகோபால், கந்தையா மற்றும் இராசரத்தினம் (கனடா), மயில்வாகனம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு சகோதரரும், காலம் சென்ற பறுவதம், பொன்னம்மா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலை, கல்கிசையில் 15.01.2025 புதன்கிழமை மு.ப.9.00 - பி.ப 6.00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் 16.01.2025 வியாழக்கிழமை பி.ப.2.00 மணிக்கு, நடைபெற்று பி.ப. 5.00 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல்
குடும்பத்தினர்

இல.25, 6/2, இராஜசிங்கம் றோட்,
வெள்ளவத்தை, கொழும்பு -06
0712299474

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

உலக வரலாற்றைப் படிப்பதை விட
உலகில் வரலாறு படைப்பதே இனிமை.

– அன்னை தெரேசா–


## அரசியல்கைதிகளுக்கு எப்போது விடிவு?

சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் அரசியல்கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கையெழுத்துச் சேகரிப்புப் போராட்டமொன்று தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. அரசியல்கைதிகளின் விடுதலைக்காகத் தமிழ் மக்களால் பல போராட்டங்கள் முன்னெக்கப்பட்டிருந்தபோதும், இதுவரை ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்கவில்லை. அரசியல்கைதிகளின் விடுதலை என்ற விடயத்தை முன்னைய அரசாங்கங்கள் தேர்தல் காலத்தில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறும் உத்தியாக மட்டும் பயன்படுத்தினவே தவிர, அதற்கு அப்பால் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தற்போது பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைத்திருக்கும் நிலையில், அரசியல்கைதிகள் விடுதலை விடயத்தில் ஏதேனும் மாற்றம் நிகழுமா என்ற நப்பாசை தமிழ் மக்களிடையே ஏற்பட்டிருக்கின்றது. ஏனெனில், தேர்தல் வெற்றிக்கு முன்னர் அரசியல்கைதிகள் விடுதலை விடயத்தில் அநுரகுமார திஸாநாயக்க சாதகமான போக்கையே வெளிப்படுத்தியிருந்தார். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி வவுனியாவுக்கு வந்திருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சட்டமா அதிபரின் ஆலோசனையின்பேரில் தமிழ் அரசியல்கைதிகளை விடுதலைசெய்யத் தயாராக இருக்கின்றோம் என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நீதி அமைச்சர் ஹர்ணநாணயக்கார இப்போது கூறியிருக்கும் கருத்து, தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் கடந்தகால அரசாங்கங்களைப் போன்று தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குச் சேகரிக்கும் யுக்தியையே கைக்கொள்கின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்திருக்கும் நீதி அமைச்சர், சிறைகளில் அரசியல்கைதிகள் என்று யாரும் தடுத்துவைக்கப்படவில்லை என்று கூறியிருக்கின்றார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களே சிறைகளில் உள்ளனர் என்று கூறியிருக்கும் நீதி அமைச்சர், அந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தண்டனை பெற்றவர்கள் தொடர்பில் எம்மால் எதுவும் செய்ய முடியாது என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். கடந்த காலங்களில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்க இதே போக்கிலேயே நடந்துகொண்டிருந்தன. கடந்த ஆட்சியில் நீதியமைச்சராக இருந்த அலி சப்ரிகூட அரசியல்கைதிகள் எவரும் இல்லை என்றே சாதித்து வந்தார். இப்போது தேசிய மக்கள் சக்தியின் நீதி அமைச்சரும் அதேவழிக்குத் திரும்பியிருக்கின்றார்.

அரசியல்கைதிகள் என்று எவரும் இல்லை என்றால், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வவுனியாவில் கூறிய தமிழ் அரசியல்கைதிகள் யார்? நீண்டகாலமாக விசாரணையின்றிச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் யார்? என்பதை நீதி அமைச்சர் ஆய்ந்தறிந்துகொள்ளவேண்டும். சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டு நீண்டகாலமாக சிறைக்கம்பிகளுக்குள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் விடயத்தை அரசாங்கம் மனிதாபிமானத்துடன் அணுகவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் இந்தவிடயத்தில் அரசியல் ஆதாயங்களைப் பின்தள்ளிவிட்டு, மனித நேயத்துடன் தீர்மானங்களை எடுக்கவேண்டும். எவ்விதக் குற்றச்சாட்டுகளும் இன்றி பல ஆண்டுகளாகத் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களையும், தண்டனைக் காலத்தை விடவும் அதிககாலத்தைச்சிறைக் கூண்டுக்குள் தொலைத்தவர்களையும் சட்டத்தின் பெயரைக்கூறி மீண்டும் மீண்டும் சிறைவாசத்துக்குள் தள்ளாது, அவர்களின் எஞ்சிய வாழ்நாளையாவது உறவுகளுடன் இணைந்துவாழ வழிசெய்யவேண்டும் என்பதே தமிழ் மக்களின் அவா.



## இந்த வருடத்தில் இதுவரை 2,045 டெங்கு நோயாளர்கள்

**கொழும்பு, ஜன. 15**

**நாடளாவிய ரீதியில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் சுமார் 2,045 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனரெனத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

கடந்த வருடம் மாத்திரம் 49 ஆயிரத்து 877 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்பதோடு 24 உயிரிழப்புகளும் சம்பவித்துள்ளன. உயிரிழந்தவர்களில் அதிகமானோர் 25 தொடக்கம் 44 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். இம்மாதத்தின் முதல்வார நிறைவில் சுமார் 1138 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அந்தவகையில் நாட்டில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பைக் காணமுடிகிறது என்றும் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## அரசின் மாற்றத்துடன் பிரிட்டன் கைகோர்ப்பு

கொழும்பு,ஜன.15

இலங்கையில்மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைக்கு அவசியமான சகல ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்கு பிரிட்டன் தயாராக இருப்பதாக இலங்கைக்கான அந்த நாட்டு உயர்ஸ்தானிகர்அன்ட்ரூ பற்றிக் தெரிவித்துள்ளார். தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மைப்பலத்தைப் பெற்றிருப்பதாகவும், அவர்களுக்கு உதவுவதற்கு சர்வதேச சமூகம் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

## 2500 கடவுச்சீட்டுகள் தினசரி விநியோகம்



நாளொன்றுக்கு 2ஆயிரத்து 500 கடவுச்சீட்டுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். இதற்கு முன்னர் நாளொன்றுக்கு 1200 கடவுச்சீட்டுகள் மட்டுமே வழங்கப்பட்டன. அவசரமாக வெளிநாடு செல்ல வேண்டியவர்கள் கடவுச்சீட்டுப் பெற தனிக் கருமபீடம் திறக்கப்பட்டுள்ளது. அந்தக் கருமபீடத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு விரைவாகக் கடவுச்சீட்டுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் விஜேபால தெரிவித்துள்ளார். (ச-இ)

## இணையக் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை

கொழும்பு, ஜன.15

எந்தவொரு கையடக்க சேவை வழங்கும் நிறுவனங்களும் தமது இணையக் கட்டணங்களை அதிகரிக்கவில்லை என இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பல கையடக்கத் தொலைபேசி நிறுவனங்கள் இணையக் கட்டணங்களை இரகசியமான முறையில் அதிகரித்துள்ளதாக சமூக வலைத்தளங்களில் போலியான தகவல்கள் பரப்பப்பட்டுவருகின்றன என்றும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் இந்திரஜித் ஹந்தபாங்கொட தெரிவித்துள்ளார். (ச-இ)



## மின்சாரசபையின் வலைத்தளம் மந்தம்

கொழும்பு, ஜன. 15

இலங்கை மின்சாரசபையின் நிகழ்நிலையில் கட்டணம் செலுத்தும் உத்தியோகபூர்வ வலைத்தளத்தை கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக பயனாளிகளால் அணுகமுடியாத நிலை தொடர்வதாக வாடிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

http://payment.ceb.lk/ என்ற குறித்த வலைத்தளமே இயங்காதுள்ளது. இதுகுறித்து மின்சாரசபையைத் தொடர்புகொண்டபோதும் பதிலளிக்கப்படவில்லை. இந்தக் குளறுபடிகளினால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## வேதவல்லி அரசரத்தினம்

**(ஓய்வுபெற்ற முன்னாள் ஆசிரியை வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி ம.ம.வி, (வேலணை மத்திய கல்லூரி), நெடுந்தீவு மகாவித்தியாலயம்)**

வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், சிற்பனை திருநெல்வேலி ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேதவல்லி அரசரத்தினம் அவர்கள் நேற்று (14.01.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், அரசரத்தினம் (சிறி வாணி நகைமாடம்) அவர்களின் அன்பு மனைவியும், காயத்திரி, காலஞ் சென்ற ஶ்ரீவத்ஸன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திலகவதி - மகாலிங்கம் மற்றும் கந்தசாமி (மன்னாதி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மணிமாறன், பொன்கைமாறன், வானதி ஆகியோரின் சிறிய தாயாரும், இராணி அம்மா, யோகம்மா, சிற்றம்பலம், மகாலிங்கம், கோணேசலிங்கம், இந்திரா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2025) வியாழக்கிழமை மு.ப 8.30 - 10.00 மணியளவில் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் வேலணை மேற்கு சிற்பனையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை மேற்கு அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20.03.1942 | 14.01.2025 |

163/15, 6வது ஒழுங்கை,
ஆடியபாதம் வீதி,
கேணியடி,
திருநெல்வேலி.

தகவல் :
குடும்பத்தினர்
கணவர் - 077 694 3137
பெறாமகன் - மணிமாறன் - 0044 244 12953

(CS/29580) J-1

# முதலாம் ஆண்டு நினைவுநாள் அழைப்பு



**கடந்த 27.01.2024 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்**

## அமரர் இராமலிங்கம் முத்துச்சாமி

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று (15.01.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

54/11, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை,
கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்

(CS/2275) J-1

குடும்பத்தினர்

# காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி; அமெரிக்காவே! அழுத்தம் கொடு!

## உறவுகள் வலியுறுத்து




**வவுனியா, ஜன.15**

**தேர்தலில் வெற்றிபெற்ற அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட றொனால்ட் ட்ரம்ப், இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதியை பெற்றுக்கொடுக்க அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.**

வவுனியாவில் பொங்கல் நாளான நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது: அமெரிக்க நிர்வாகம் எங்களை அழைத்தால், வொஷிங்டனுக்குச் சென்று, காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள், அரசியல் கைதிகள் மற்றும் நிலையான, பாதுகாக்கப்பட்ட, சுதந்திரமான, இறையாண்மையுள்ள தமிழர் தாயகத்தின் தேவை குறித்து விவாதித்து முடிவெடுக்கத் தயாராக உள்ளோம்.

எங்களுக்கு இந்த நாள் ஒரு சோகமான மைல்கல்லையும் குறிக்கிறது. தமிழ் தாய்மார்கள் தங்கள் காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளைத் தேடி இடைவிடாது போராடி வருகின்றனர்.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை தமிழர்களாகிய நாம் வரவேற்கின்றோம் - என்றனர்.

(ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
15.01.2025
புதன்கிழமை

**அச்சத்தைப்போல வாழ்க்கையில் மிகவும் மோசமான மற்றும் மிகவும் அபாயகரமான விஷயம் ஒன்றுமில்லை..**

**- ஜவஹர்லால் நேரு**

# பார் போற்றும் பட்டிப்பொங்கல்!



மக்களின் வாழ்வில் ஒன்றிய பசுவுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும், பசுக்களில் எல்லாத் தேவர்களும் இருப்பதாலும் பசுக்களை வணங்கி வழிபடும் நாளாக தைமாதத்தின் இரண்டாம் விழாவாக பட்டிப்பொங்கல் இன்று கொண்டாடப்படுகின்றது.

பட்டிப்பொங்கல் தமிழர்களின் வாழ்வில் இரண்டறக்கலந்த விடயமாகும். பட்டிப் பொங்கலின் நிமித்தம் மாடுகள் கட்டும் தொழுவத்தினைச் சுத்தம் செய்துகொள்வார்கள். கால்நடைகளைக் குளிப்பாட்டி சுத்தம் செய்வார்கள். மாடுகளின் கொம்புகள் சீவப்பட்டு பளபளக்கும் வகையில் வண்ணம் பூசி, கூரான கொம்பில் குஞ்சம் அல்லது சலங்கை கட்டிவிடுவார்கள். கழுத்துக்கு தோலிலான வார் பட்டையில் சலங்கை கட்டி அழகுபடுத்துவார்கள். திருநீறு பூசி குங்குமப் பொட்டிட்டும் புதிய மூக்கணாங் கயிறு, தாம்புக் கயிறு அணிவித்தும் தயார்செய்வார்கள்.

உழவுக்கருவிகளை சுத்தம்செய்து சந்தனம், குங்குமம் வைப்பார்கள். விவசாயத்தில் பயன்படுத்தப்படும் அனைத்துக் கருவிகளையும் இதேபோல செய்வார்கள். தாம்பாளத் தட்டுகளில் தோட்டம் காடுகளில் விளைந்த பயிர், பச்சைகளை வைத்தும் தேங்காய், பூ, பழம், நாட்டுச் சர்க்கரை என எல்லாம் பூஜைக்காக எடுத்துவைப்பார்கள். தொழுவத்திலேயே பொங்கல் பொங்கி கற்பூர தீபாராதனை காட்டப்படும். இதன்பின் பசு, காளை, எருமை என அனைத்துக் கால்நடைகளுக்கும் பொங்கல், பழம் கொடுப்பார்கள்.

அன்றைய காலத்தில் கிராமங்களில் மாடில்லாத வீடுகள் கிடையாது. வீட்டில் மாடு வளர்ப்பதால் செல்வம் பெருகும். காலையில் பசுமாட்டில் விழித்தால் அன்றையநாளில் சுபமாக சகல சித்திகளும் கிடைக்குமென்று கூறுவார்கள். சிவனின் வாகனம் என்பதாலும் பசுவை கோமாதா என்று வணங்குகிறார்கள். கோமாதா பூஜை ஆலயங்களில் நடத்தப்படுவது வழமை. வீடுகள் குடிபோவதற்கு முதல்நாள் வீட்டில் பசுமாட்டைக்கட்டுவதும் வழக்கம். ஆலயங்களில் தேரோட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரும் பசுமாட்டில் விழித்து தீபம்காட்டி உணவு உண்ணக்கொடுத்து வழிபாடு செய்வார்கள். அப்படி மாடுகள் உழவுத்தொழிலில் மட்டுமல்ல இந்துக்களின் வாழ்வியலிலும் முக்கியத்துவம் பெறும் ஒரு செல்வமாகும்.

**அன்றைய காலத்தில் கிராமங்களில் மாடில்லாத வீடுகள் கிடையாது. வீட்டில் மாடு வளர்ப்பதால் செல்வம் பெருகும். காலையில் பசுமாட்டில் விழித்தால் அன்றையநாள் சுபமாக சகல சித்திகளும் கிடைக்கு மென்று கூறுவார்கள். சிவனின் வாகனம் என்பதாலும் பசுவை கோமாதா என்று வணங்குகிறார்கள்**





அத்தகைய மதிப்புள்ள செல்வமான மாடுகள் அன்று உழவுத்தொழிலில் மட்டுமல்ல விவசாயத்தில் மிகவும் கூடுதலான பாகத்தை வகித்தன என்றால் அது மிகையல்ல.

உழவில் மட்டுமல்ல சூடுவைத்து விளைந்த நெல்மணிகளை வீட்டுக்குக் கொண்டுவருவது வரையில் மாடுகளின் பங்கு அளப்பரியது.


தமிழர்களின் வாழ்வில் தைப்பொங்கல் எவ்வளவுக்கு எவ்வளவு தவிர்க்க முடியாததோ அவ்வாறே, பட்டிப் பொங்கலும் இரண்டறக் கலந்துள்ளது என்றால் மிகையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தமிழர் திருநாளான தைப்பொங்கல் தினமான நேற்று செவ்வாய்க் கிழமை அச்சுவேலி புனித அந்தோனியார் ஆலயத்தில் விசேட திருப்பலிப் பூசைகள் இடம்பெற்றன. ஆலய பங்குத்தந்தை அடிகளார் மைக்கேல் சௌந்தரநாயகம் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தைப்பொங்கல் விசேட பூஜை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (ச-25, 23)



# மன்னாரில் தைப்பொங்கல் நிகழ்வுகள்

மன்னார், ஜன. 15

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களில் விசேட தைப்பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

வர்த்தக நிலையங்கள் நிதி நிறுவனங்கள் உட்பட அனைத்துத் கத்தோலிக்கத் தேவாலயங்களிலும் தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டதோடு விசேட திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது. மன்னார் பஜார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் பொங்கல் பொங்கி மக்கள் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டனர். (ச-25, 213,56,60)







# இரண்டாம்மொழிக் கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

மன்னார், ஜன.15

தேசியமொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நிகழ்நிலைத் தொழில்நுட்பம் ஊடாக வடக்கு, கிழக்கு மற்றும் மேல் மாகாணத்தில் அரச உத்தியோகத்தர்களுக்காக மேற்கொண்ட 100 மணித்தியாலம் மற்றும் 150 மணித்தியால இரண்டாம் மொழிப் பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்த அரச உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மன்னார் நகரசபைக் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கல்வி மற்றும் ஆய்வு அதிகாரி திருமதி பாலரஞ்சனி காந்தீபன்,தேசிய இணைப்பாளர் டிலான் ரணசிங்க, தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மத்திய மாகாண இணைப்பாளர் சமீர அத்தப்பத்து, மன்னார் மாவட்ட மொழி இணைப்பாளர் திருமதி சிந்துஜா சில்வா, மற்றும் இரண்டாம் மொழிப் பாட வளவாளர்களாகிய ஈ.எஸ்.கே.ரோச், சுபாஷினி விநாயகமூர்த்தி, திருமதி வீ.சர்மினி ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அதேவேளை புதிய இரண்டாம் மொழி சிங்களப் பாடநெறியானது ஆரம்பிக்கவுள்ள நிலையில் பயிற்சிநெறியை தொடர விரும்புவோர் 0776355521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக இரண்டாம் மொழி வளவாளர் திருமதி இந்துனில் சாகரிக்காவினைத் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-33)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பெண் அடிமைத்தனம் என்று விலகும்?

பதுமிகா நாகபூஷணன்
உடுவில் மகளிர் கல்லூரி


'அரிது அரிது மானிடராதல் அரிது' என்றாள் எம் பாட்டி ஔவையார். மனிதராய் பிறக்க நாம் கோடி புண்ணியம் செய்திருக்கவேண்டும். 'மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டும்' என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் இன்றுவரை இது வெறும் வாக்காக மட்டுமே காணப்படுகிறது. 'பெண் பூப் போன்றவள். பெண் மென்மையானவள்' எனப் பல கூற்றுகளை கூறி இந்த சமூகம் பெண்களை மனதளவில் ஒடுக்கி. அடிமையாக்கி வைத்திருக்கிறது. ஆண்களால் மட்டுமன்றி இன்னொரு பெண்ணாலுமே பெண் அடிமையாகச் சித்தரிக்கப்படுகிறாள்.

ஒரு பெண் அன்னையாக அகிலம் படைப்பாள். தோழியாக துயரம் துடைப்பாள். உடன்பிறந்து இடர்கள் உடைப்பாள். தாரமாக தாங்கிக் கிடப்பாள். மகளாக மகிழ்ச்சியை தருவாள் இத்தகைய வல்லமைகளுடைய பெண் பல இன்னல்களையே அதிகமாக அனுபவிக்கிறாள். பலர் வீடுகளில் இன்றும் பெண் அடிமைத்தனம் அரங்கேறிக்கொண்டுதான் இருக்கிறது. யானையின் காலில் சிறுவயதிலேயே ஒரு சிறிய சங்கிலி பூட்டப்பட்டுவிடும். ஆனால் அந்த யானையால் அதை உடைக்க இயலாது. தன்னால் அந்த சங்கிலியை உடைக்க முடியாது என்ற எண்ணம் அதன் மனதில் சிறு வயதில் ஆழமாகப் பதிந்துவிடும். அந்த யானை வளர்ந்து பெரியளவு உருவம் எடுத்தாலும் தன்னால் அதை உடைக்க முடியாது என்ற எண்ணம் அதை விட்டுப் போகாது. அதனால் அந்த யானைக்குத் தெரியாது தான் இப்பொழுது சங்கிலியை உடைக்க முயற்சி செய்தால் அந்த சங்கிலியோடு அதைக் கட்டியிருக்கும் தூணையே பிளந்து எடுக்க முடியும் என்று. அவ்வாறுதான் பெண்களின் நிலையும்.

மலடி, விதவை போன்ற சொற்களைக் கொண்டு பெண்களை தரம் பிரித்துப் பார்க்கும் சமூகத்தில் தான் நாம் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆணும் பெண்ணும் சமன் என்றால் ஏன் இந்த சமூகம் ஓர் ஆணை அவ்வாறு தரம் பிரித்துப் பார்ப்பதில்லை? தற்காலத்தில் ஒரு பெண் இரவில் தனியாகத் தைரியமாக நடமாட முடியாது இதற்குக் காரணம் ஒரு பொறுப்பற்ற ஆண். ஆனால் எம் சமூகம் பெண்களை இரவிலே நடமாடவேண்டாம் என்று விளிக்கிறதே தவிர அந்த ஆணை வழிப்படுத்த முற்படுவதில்லை. ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம் என்பது வெறும் வார்த்தைகளால் அல்லாமல் ஒவ்வொருவருடைய உள்ளத்தாலும் செயலுறுப்பெறும்போதுதான் பெண் விடுதலையென்பது மெய்ப்படும்.



# சவால்களை எதிர்கொண்டு நவீன யுகத்தை வெல்வோம்



16

பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)

பொதுவாக சவால்கள் எனும்போது பலருக்குப் பிடிக்காத விடயமாகவும், அதற்கு மேலாக அதனை ஒரு பிரச்சினை என்ற கண்ணோட்டத்தில் உள்ளடக்கி விடுவதும் வழக்கமாகும். பிரச்சினை எனும்போது என்னால் தீர்க்கமுடியாது, நிச்சயம் இதிலிருந்து வெளிவரமுடியாது என்ற எதிர்மறையான மனப்பாங்கானது நாம் அதிலிருந்து வெளிவருவதற்காக எந்தவொரு முயற்சியினையும் எடுக்காத படி எங்களை உருவாக்கிவிடுகின்றது. அவற்றை நாம் சவால்கள் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும்போது இதிலிருந்து நிச்சயமாக வெளிவரமுடியும் என்ற துணிவான எண்ணம் எம்முள் தோன்றும்.

ஒருமுறை மாவீரன் நெப்போலியனிடம் ஏன் நீங்கள் நீச்சல் பழகவில்லை என்று கேட்டபோது அவர் சொன்ன பதில். "சுறாக்கள் இல்லாத ஆழ்கடலில் நான் நீச்சல் பழகுவதில்லை" இதனூடாக ஆழமான தன்நம்பிக்கையை வெளிப்படுத்தி நிற்கிறார் நெப்போலியன். வெற்றியாளர்கள், உலகில் சாதனை படைத்த பலர் சவால்கள் ஊடாகவே தங்களுடைய பயணங்களை மேற்கொண்டிருக்கிறார்கள்.

சவால்களை எந்த நிலையில் நாம் நோக்கவேண்டும் என்பதனை, எங்கள் மனநிலையில் நாம் திடமாக உருவாக்கி வைத்திருக்கவேண்டும். தோமஸ் அல்வா எடிசன் பிறந்து சில காலங்களிலேயே அவருடைய தந்தை இறந்துவிட்டார். எடிசனுக்கு செவிப்புலன் குறைபாடு காணப்பட்டது. அவற்றோடு பின்னாளில் மூளைக்காய்ச்சலும் அவரை வெகுவாகப் பாதித்தது. அதனால் அறிகைத்திறனும் பாதிப்படைந்தது. எடிசன் எட்டு வயதைத் தாண்டிய பின்னரே பாடசாலையில் இணைந்து மூன்று மாதங்களுக்குள் "மூளையில்லாப் பிள்ளை" எனும் அடையாளப்படுத்தலுடன் விசேட தேவைக்குட்பட்ட பாடசாலையில் இருந்து நிரந்தரமாக வீட்டிற்கு அனுப்பப்பட்டார். வீட்டிற்கு அனுப்பப்படும்போது ஆசிரியர் கொடுத்த எடிசன் தொடர்பான அவமதிப்புக் கடிதம் பற்றி தோமஸ் அல்வா எடிசனுக்குப் பின்னாளிலே தெரியவந்தது. ஆனால் அவருடைய தயாரின் சிறந்த வழிகாட்டலுடன் சுயகற்றலில் எடிசன் ஈடுபட்டார். அவர் இப்படியான சவால்களை எதிர்கொண்டு அதற்கு மத்தியிலும் அதிக நேரத்தை புத்தகங்களுடனும், பத்திரிகைகளுடனும் செலவுசெய்தார். அவருக்கு இருந்த கேட்டல்திறன் பாதிப்பைப் பார்வைதிறன் மூலம் சமன்செய்துகொண்டார். அதற்குப் பின்பு ரயில் நிலையத்தில் தந்தி பரிவர்த்தனை, இயக்குனர் பணியில் ஈடுபட்டபோது அதுவும் பறிபோய்விட, அதே ரயில் நிலையத்தில் சிற்றுண்டிகளைக் கூவி விற்கும் சிறுவியாபாரத்தை மேற்கொண்டார். தன்னுடைய ஆரம்பகாலங்களில் குடும்பம். சமூகம், வியாபாரம் போன்ற பல்லேறு நிலைகளிலும் சவால்களை சந்தித்து இருந்தாலும், அவை அனைத்தையும் மாற்றியமைத்து தன்னுடைய ஆராய்ச்சியின் மூலம் உலகில் மிகப் பெரிய வெற்றிகண்டார் என்பதனை வரலாறு உணர்த்தி நிற்கிறது. இப்படியான வெற்றியாளர்கள் பலர் இப்பூமியில் வாழ்ந்நத எம்மைப்போன்ற மனிதர்கள்தானே. ஒரு நூலாசிரியர் குறிப்பிட்டதைப் போன்று "பிரச்சினைகளைக் கண்டு தளர்ந்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடாது. பிரச்சினையை உயிரோடு புதைத்துவிட்டால் கண்டிப்பாக ஒரு நாள் உயிர்ந்தெழுந்துவிடும். ஆகவே பிரச்சினைகளைக் கொலைசெய்து புதைத்துவிடவேண்டும்" என்ற கூற்று ஆழ்ந்த அர்த்தத்தைக் கூறுகின்றது.

வெற்றி என்ற இலக்கை நோக்கி வாழ்க்கை என்ற கப்பலை நகர்த்திச் செல்வதற்கு மோசமான அலைகள் போன்ற சவால்களுக்குள் பயிற்சிபெறுவதே சிறப்பானது. அப்போதுதான் எங்கள் வாழ்க்கையும் சுவாரசியம் நிறைந்த ஒரு வாழ்வாக, ஒரு வெற்றியாக உருவாக்கம்பெறும். சாதாரணமாகக் கிடைக்கும் வெற்றிக்கும், பல்வேறு சவால்களைக் கடந்துபெறும் வெற்றிக்கும் இடையில் பல்வேறு வேறுபாடுகளும் அதற்குள் மகிழ்ச்சியும் தங்கியிருக்கிறது. எனவே முழுமனதுடன் ஏற்று அதனை வெற்றிகொண்டு வெற்றி மனிதர்களாக பயணப்படுவோம்.

புதன்பொய்கைக்கு நீங்களும் எழுதலாம்
- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் ஜெகதாம்பாள்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஜெகதாம்பாள் அவர்கள் நேற்று (14.01.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலாயுதம்-வள்ளியம்மை தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்ற நாதஸ்வர வித்துவான் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரி, நாகேஸ்வரி, முருகதாஸ், ராதை, பானுமதி, கமலதாஸ், ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான முருகானந்தம், ஸ்ரீஷ்கந்தராஜா மற்றும் சிவகௌரி, மகேஷன், விக்கினேஸ்வரன், கீர்த்தனா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜீவாகரன், பிரபாகரன், கஸ்தூரி, நந்தகோபன், மதுராங்கி, விஷ்ணுவர்த்தன், ராகவர்த்தனி, மதுரஞ்சனி, கிரிகரன், அபிராமி, கரிகிக்ஷன், ஹரிகரன், சரண்யா, ஆதிரண், ஆரணன், அயிலவன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், சாய்லேகா, அனித்திரா, கனிமொழி, சுகிர்தன், தேவர்மா, பிரவஷ்மா, விவர்த்தினி, சாஷினி, மித்திரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, NR கோவிந்தசாமி, செல்லம்மா, NR சின்னராஜா மற்றும் சத்தியபாமா, சாரதாம்பாள், காலஞ்சென்ற வேதாநாயகி மற்றும் NR சந்தானகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (15.01.2025) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் கிரிகைகள் நடைபெற்று மாலை 3:30 மணிக்கு காரைக்கால் இந்து மையானத்தில் (இணுவில்) நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.


**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 2280) P-1

# மரண அறிவித்தல்

பிறப்பு
31.07.1945

இறப்பு
13.01.2025



## பொன்னையா கணேசலிங்கம்

**(முன்னாள் பிள்ளையார் இன் ஹோட்டல் முகாமையாளர்)**

கரணவாய் வடக்கு கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும், "உதயதாரகை" அல்வாய் வடமேற்கு அல்வாயை நிரந்தர வதிவிடமாகவும், மூதாளர் அன்பு இல்லம் சிவபுரவளாகம், A9 வீதி, முகமாலை என்ற இடத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா கணேசலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (13.01.2025) திங்கட்கிழமை அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தவபாக்கியம் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா பாக்கியம் தம்பதியரின் மருமகனும், திருமதி தவமணிதேவி (ஓய்வு நிலை மக்கள் வங்கி முகாமையாளர்) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் விருப்பத்திற்கிணங்க யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திடம் நேற்று முன்தினம் (13.01.2025) திங்கட்கிழமை பிற்பகல் 05.30 மணி அளவில் ஒப்படைக்கப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**திருமதி க. தவமணிதேவி (மனைவி)**
(ஓய்வு நிலை மக்கள் வங்கி முகாமையாளர்)
07[illegible]58


**மூதாளர் அன்பு இல்லம்,**
**முகமாலை.**

(CR/44104) J-1

# மரண அறிவித்தல்

மலர்வு
16.02.1948

உதிர்வு
13.01.2025



## பொன்னையா சிவராசரத்தினம் (சிவம்)

**(முன்னாள் விவசாய சம்மேளனத் தலைவர்)**

யாழ்ப்பாணம் பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா சிவராசரத்தினம் நேற்றுமுன்தினம் (13.01.2025) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், கோபிராஜ் அவர்களின் பாசமிகு தந்தையும், மோகனவாணி அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சபாரட்ணம், யோகரட்ணம், மனோரஞ்சிதம், தளையசிங்கம் மற்றும் தர்மராஜசிங்கம், இராசரத்தினம், பராசக்தி, ஈஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அக்ஷயா, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2024) வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பெரியவிளான் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 306 8954**

**பெரிய விளான்,**
**[illegible]**

(CS/29582) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலில் தாக்குதல்!

இஸ்ரேலின் மத்திய பகுதியை இலக்கு வைத்து ஹவுத்தி அமைப்பு நேற்று ரொக்கெட் தாக்கு தலை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹவுத்தியின் ஏவுகணைகள் இஸ்ரேலால் வான்பரப்பில் இடைமறித்து அழிக்கப்பட்டன என்றும், எவருக்கும் காயங்கள் இல்லை என்றும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)


## அரிசி ஆலை உபகரணங்கள் விற்பனை

எமது சங்கத்திற்கு சொந்தமான அரிசிஆலை உபகரணங்கள் விற்பனை செய்யப்பட உள்ளன.

எனவே தேவையுடையோர் எதிர்வரும் 2025.01.31ம் திகதிக்கு முன்பாக தமது கேள்வி கோரல் விண்ணப்பங்களை கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

**தலைவர்**
**வவுனியா தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம்**
**புகையிரத நிலைய வீதி**
**வவுனியா.**
**024-222 2308**

(CR/44103) J-1


## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம் , ஜன.15

யாழ். அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் இன்று புதன்கிழமை மாலை 3 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த பொதுக்கூட்டத்தில் அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (சு-66)


## சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட, சபைக்கு சொந்தமான கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் 18.12.2024 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் NP/14/41(1)/04/-Gen03/01/2024 இலக்க 17.12.2024 திகதிய கடிதத்தின் பிரகாரம் பிற்போடப் படடிருந்த குறித்த கேள்வி திறத்தலானது, வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் G/NPC/A4/Com/27/2025 இலக்க 03.01.2025 திகதிய கடிதத்தின் பிரகாரம் இரத்துச்செய்யப்படுகிறது என்பதனை அறியத் தருகின்றேன்.

குறிப்பு:- விண்ணப்படிவங்களை பெற்றுக்கொண்டவர்கள் செலுத்தப்பட்ட மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணத்தை பற்றுச் சீட்டின் மூலப்பிரதியுடன் அலுவலக நேரத்தில் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள முடியும்.


**செயலாளர்,**
**நகராட்சிமன்றம்,**
**சாவகச்சேரி.**

15.01.2025

(CR/44089) J-1


## மரண அறிவித்தல்

## வீரையா ராஜா



**தோற்றம்** 29.07.1940 — **மறைவு** 13.01.2025

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், துணவி வட்டுக்கோட்டையினை வசிப்பிடமாக வும் கொண்ட வீரையா ராஜா நேற்று முன்தினம் (13.01.2025) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரங்கநாதன் - பார்வதி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், கோபாலவர்ணன் (மோகன் - வத்தளை), ஸ்ரீதேவி (நெதர்லாந்து) அவர்களின் பாசமிகு தந்தையும், ரேணுகாதேவி, பாலசந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆதித்யா, ஜோசுவா, அஜாய் (நெதர்லாந்து), அனித்தா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2025) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**
**மோகன் (மகன்) - 075 393 4836**
**ஸ்ரீதேவி (மகள்) - 0031 628 964 894**

47/7A யூட் றோட்,
எந்தேரமுல்ல, வத்தளை.

(CS/ 29579) J-1

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அன்னை மடியில்** 21 . 08 . 1944

**ஆண்டவன் அடியில்** 11 . 02 . 2020

### அமரர் வேலாயுதர் காசிநாதர்

**(ஓய்வுபெற்ற வயோதிபர் இல்ல பணியாளர்)**

**திதி: அபரபக்க துதியை - 15.01.2025**

வாழ்க்கை என்னும் பாதையிலே
எம்மோடு பயணித்த தெய்வமே!
இன்றுடன் ஐந்து வருடம் முடிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு விலகாது!
ஈடில்லா எங்கள் பொக்கிஷம் நீங்கள் தானே
உங்களுக்கு நிகர் வேறு யாரப்பா?
அன்பு ஒன்றை வாடகையாய் கொடுத்து
எம் நெஞ்சினில் வாழ்கின்றீர் இன்று
தூண்டில் பட்ட மீனாய் துடிக்கின்றோமப்பா
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு பிரியாது
இன்று பிரிவு என்னும் துயரால்
ஐந்து ஆண்டு ஓடி மறைந்தாலும்
எம் உள்ளங்களில் என்றும்
நீங்காமல் நிலைத்து வாழ்வீர்கள்!

**உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**


**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**ஈஸ்வரி பவனம்**
**கைதடி கிழக்கு, கைதடி.**

**என்றும் பிரியாத நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

(CS/2258) J-1

## மரண அறிவித்தல்



**தோற்றம்** 15 . 12 . 1939 — **மறைவு** 13 . 01 . 2025

### யேமிஸ் பிரான்சிஸ் (துரைசிங்கம்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட யேமிஸ் பிரான்சிஸ் நேற்று முன்தினம் (13.01.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேமிஸ் லோப்பையா - அன்னம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராசு - இராசம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மரியராணி (வள்ளியம்மா) அவர்களின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனிதகொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**21, சந்தன மாதா கோவில் ஒழுங்கை,**
**பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.**

(CS/29578) J-1

**தகவல் :**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் அமைக்கப்பட்ட கடைகள் மற்றும் சபைக்கு சொந்தமான கடை என்பவற்றினை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்வி மனு கோரல் அறிவித்தல் - 2025

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 15.01.2025 தொடக்கம 28.01.2025 பிற்பகல் 2.00 மணி வரை (அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 29.01.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 29.01.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- நகராட்சி மன்ற அலுவலகம் சாவகச்சேரி.

கேள்விஅட்டவணை

பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கடைத்தொகுதி

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/PT2/01 | ரூபா 12,000,000.00 | ரூபா 50,000.00 | ரூபா 180,000.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT2/02 | ரூபா 10,800,000.00 | ரூபா 45,000.00 | ரூபா. 162,000.00 | ரூபா. 2,000.00 |

பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கடைத்தொகுதி (மேல்மாடி)

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/BT4/01 | ரூபா 2,400,000.00 | ரூபா 10,000.00 | ரூபா 36,000.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/BT4/02 | ரூபா 1,920,000.00 | ரூபா 8,000.00 | ரூபா. 28,800.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/BT4/03 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |

சந்தையின் உட்பகுதியில் அமைந்துள்ள கடைத்தொகுதி

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/PT3/01 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/02 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/03 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/04 | ரூபா 1,800,000.00 | ரூபா 7,500.00 | ரூபா 27,000.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/05 | ரூபா 1,800,000.00 | ரூபா 7,500.00 | ரூபா 27,000.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/06 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/07 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/08 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |

பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள நகர சபைக்கு சொந்தமான கடை

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| **NBS 02** | ரூபா 1,680,000.00 | ரூபா 7,000.00 | ரூபா 25,200.00 | ரூபா. 2,000.00 |

நிபந்தனைகள்:-

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருப்பதுடன் தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் நிரந்தரமாக வசிப்பவராகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம சேவகரினால் வழங்கப்பட்ட வதிவிட குணநல சான்றிதழ் மற்றும் குடும்ப அட்டையின் பிரதி என்பவற்றுடனும் சமுகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினை "செயலாளர், நகரசபை, சாவகச்சேரி" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 28 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு ஒரு விண்ணப்ப படிவம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு கடை மாத்திரமே வழங்கப்படும். அத்துடன் ஏற்கனவே நகரசபையின் கடைகளை நீண்ட கால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
5. கடைகளுக்குரிய மாதாந்த வாடகையாக விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும்.
6. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உப வாடகைக்கு கொடுக்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
7. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள் மற்றும் அபாயகரமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
8. சித்திகர கேள்விதாரராக தெரிவு செய்யப்படுபவர் கேள்வித்தொகையை முழுமையாக செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொண்டு நகராட்சி மன்றத்துடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.
9. சித்திகர கேள்விதாரர் நகர சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
10. சித்திகர கேள்விதாரர் 03 மாத கால வாடகையினை பாதுகாப்பு வைப்பு பணமாக செலுத்த வேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி, வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்துவதுடன் வியாபார உரிமத்திற்குரிய கடைகள் வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
12. நிர்ணயிக்கப்பட்ட கேள்வி தொகையை விட குறைவாக கோரப்படும் கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும் அத்துடன் அவற்றுக்கான கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
13. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் மற்றும் கேள்வி தொடர்பாக எந்தவொரு இறுதி முடிவினையும் எடுக்கும் அதிகாரம் சபையின் செயலாளருக்கு உண்டு.
14. மேலதிக விபரங்களை நகராட்சி மன்ற அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

15.01.2025

# 2025 பாதீட்டின் இலக்கு என்ன?

## கேள்வி எழுப்புகின்றார் ஹர்ஷ டி சில்வா

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் வாக்குறுதிகளை நிறைவேற்றும் நிவாரண வரவு - செலவுத் திட்டமா அல்லது பொருளாதார மேம்பாட்டுக்கான வரவு செலவுத் திட்டமா என்பதை அரசாங்கம் வெளிப்படையுடன் மக்களுக்கு அறிவிக்கவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா.

இதுதொடர்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கத்தை எவ்வாறு நிர்வகிப்பது என்பதில் அரசாங்கம் தடுமாற்றமடைந்துள்ளது. இயலாவிடின் தெரிந்தவர்களிடம் ஆலோசனை பெறவேண்டும்.

அரிசித் தட்டுப்பாட்டுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பொறுப்புக் கூற வேண்டும் என்று நாங்கள் குறிப்பிடவில்லை. வர்த்தமானி வெளியிட்டோ அல்லது இராணுவத்தை கொண்டோ அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வுகாண முடியாது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாறே அரிசித் தட்டுப்பாடு தீவிரமடைந்திருந்தது. சிறந்த கொள்கைத் திட்டங்களை வகுத்து 210 நடுத்தர அரிசி ஆலை உற்பத்தியாளர்கள் 10000 விவசாயிகளை உள்ளடக்கி 8 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் 'சக்தி அரிசிக் கூட்டுறவுச் செயற்றிட்டத்தை' ஆரம்பித்தோம். 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கு முன்னர் அனைத்து வகையான தேசிய உற்பத்தி அரிசி வகைகளின் விலை 100 ரூபாவுக்கும் குறைவான தாகக் காணப்பட்டது.

தற்போதைய அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வுகாண்பதற்கு சக்தி அரிசி கூட்டுறவு திட்டத்தை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் என்பதை அரசாங்கத்திடம் பலமுறை வலியுறுத்தியுள்ளோம். இருப்பினும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் உள்ளடக்கத்தை உன்னிப்பாக அவதானித்துள்ளோம். நாட்டு மக்களை திருப்திப்படுத்துவதற் காக எடுக்கும் தவறான தீர்மானங்க ளின் பிரதிபலனை இறுதியில் மக்களே அனுபவிக்க நேரிடும். ஆகவே இவ் விடயத்தில் அவதானத்துடன் செயற்பட வேண்டும் - என்றார். (எ-இ)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

மீசாலை புத்தூர்ச்சந்தியில் அமைந்துள்ள மீசாலை வடக்குச் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும் அண்மையில் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

நிர்வாகத் தெரிவில் தலைவராக நா.மயூரன், செயலாளராக ப.சிறீகாந்தன், பொருளாளராக சு.சண்முகம், உபதலைவராக கே.பிரதீபன், உபசெயலாளராக திருமதி ஞா.திலகராணி, நிர்வாகசபை உறுப்பினர்களாக தி.முருகதாஸ், மு.வீரசிங்கம், வி.புஸ்பநிதி, க.சுகுமார், சி.சிவநேசன், சி.விஜயறூபன், கணக்காய்வாளராக கு.சிவானந்தம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையில்

# ஜனவரி 18ஆம் திகதி தமிழரசின் மத்தியகுழு

வவுனியா, ஜன. 14

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் தலைமையில் நடைபெறவுள்ளது. திருகோணமலையில் உள்ள சிவில் அமைப்பொன்றின் கேட்போர் கூடத்தில் இந்தக் கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தின்போது, கட்சிக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கு, கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகள், மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மாநாடு தொடர்பான விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

அத்துடன், புதிய அரசியலமைப்பு முயற்சிகளை ஓரணியில் இணைந்து கையாளுவது தொடர்பிலும் இதன்போது கவனத்தில் கொள்ளப்பட வாய்ப்புகள் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-110)

## 13 ஆவது...

தமிழகத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் விழாவில் கலந்துகொண்ட அவர், இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக நாங்கள் என்ன கருதுகின்றோம் என்பதை விடவும் தமிழ் மக்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பதுதான் முக்கியமான விடயமாகும்.

தமிழ் மக்கள் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தினை தமக்குக் கிடைத்த உரிமையாகக் கருதுகின்றார்கள் என்பதை எம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது. அதனடிப்படையில்தான் நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதனை உள்ளீர்த்திருந்தோம்.

அதுமட்டுமன்றி, 13ஆவது திருத்தச் சட்டம் நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பிலும் காணப்படுகின்றது. அந்த வகையில் எதிர்வரும் மார்ச் மாதமளவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தவுள்ளதோடு அதனையடுத்து இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் முற்பகுதியில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

மேலும், தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளை வென்றெடுக்கும் விடயமாக13ஆவதுதிருத்தச்சட்டத்தினையும், மாகாணசபை முறைமையும் கருதுகின்றபோது அதனை அர்த்தபுஷ்டியான நிர்வாகக் கட்டமைப்பாக செயற்படுத்திப் பார்ப்பதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம் - என்றார். (அ-ம-இ)

## இஸ்ரேலியப்...

இஸ்ரேல் இராணுவத்தினர் இலங்கைக்கு வருவதற்காக விசா வழங்குவதை நிறுத்தி வைக்குமாறு ஜனாதிபதி அநுரவிடம் தேசிய ஷூரா சபை வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு வந்த இஸ்ரேலியர்கள் மீது ஏற்கனவே பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. எனவே, அந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விரைவான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தேசிய ஷூரா சபை கோரியுள்ளது.

இஸ்ரேலியர்களின் நடவடிக்கைகளால் இலங்கையின் தேசியப் பாதுகாப்பிலும், சமூக நல்லிணக்கத்திலும் பாதிப்புக்கள் ஏற்படுவதற்குச் சாத்தியங்கள் உள்ளன. எனவே, அது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தேசிய ஷூரா சபை மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

## அரசியல்...

தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் உள்ளார்கள். சிலரின் வழக்குகள் நீண்டகாலமாகவும், குறுகிய காலமாகவும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டவர்களின் பட்டியலை விரைவாக தயாரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டதன் பின்னர், அடுத்தகட்ட நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளைப் பெற்று முன்னெடுக்கப்படும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் நியாயமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார்.

தமிழ் அரசியல்கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி தமிழர் தாயகத்தில் பரவலாக கையெழுத்துப் போராட்டங்கள் இடம்பெற்றுவரும் நிலையில், இலங்கைச் சிறைகளில் அரசியல் கைதிகள் எவரும் இல்லை என்று நீதி அமைச்சர் தெரிவித்துள்ள கருத்து முக்கியத்துவம் மிக்கதாகப் பார்க்கப்படுகின்றது. (அ-ம-இ)

## தோட்டத்...

லிங்கம் பிரதீப் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

நாட்டின் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்கள் பெரும்பாலும் குறைந்த சம்பளம் கடினமான வேலைப்பளு உள்ளிட்ட நிலைமைகளால் நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றார்கள்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அவர்களின் சம்பளம் அதிகரித்து ... ளுக்கு ஏற்ப ...

அவர்களின் சம்பளத்தை அதிகரிப்பது குறித்து தோட்ட நிறுவனங்கள் உள்ளிட்டவற்றுடன் நாங்கள் தொடர்ச்சியாகக் கலந்துரையாடி வருகிறோம். தற்போது தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமே வழங்கப்படுகின்றது. ஆகவே அவர்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்குவதற்கான சாத்தியக் கூறுகளையும் நாங்கள் பரிசீலித்து வருகிறோம். தற்போது அது குறித்தும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (அ-ம-இ)

## பயிர்...

பயிரழிவு மதிப்பீட்டுப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், சுமார் 95 சதவீதமான பணிகள் நிறைவடைந்துள்ளன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் மன்னார் போன்ற பகுதிகளில் பயிரழிவு மதிப்பீடுகள் இறுதிக்கட்டத்தில் உள்ளன. அந்தப் பணிகள் நிறைவடைந்ததும் இழப்பீடுகள் வழங்கப்படும் என்று கமநலக் காப்பீட்டுச் சபை மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

## ஜனாதிபதி...

மரியாதையுடன் வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது. சீனாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் சென் சியாடோங் விமான நிலையத்துக்குச் சென்று ஜனாதிபதி அநுரவை வரவேற்றார்.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, தொழில்நுட்பம் மற்றும் விவசாய மேம்பாடு, வறுமை ஒழிப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட பல களப் பயணங்களிலும் பல உயர்மட்ட வணிகக் கூட்டங்களிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## வடக்கில்...

கிழக்கு மாகாணங்களில் மிதமானது முதல் கனமானது வரை மழை தொடரும் என்று வானிலை ஆய்வாளரும், யாழ். பல்கலைக் கழகத்தின் புவியியல் துறை விரிவுரையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (அ-ம-இ)

## 6,000...

வாய்ப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் போர்க் களங்களுக்கு இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக பலர் கடத்தப்பட்டுள்ளனர். இதையடுத்து, நாட்டில் இயங்கிவரும் போலியானதும், சட்டவிரோதமானதுமான வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவரகங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, இதுவரை 6 ஆயிரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பதில் அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்ததாவது:-

பதிவு செய்யப்படாத வெளிநாட்டுவேலை வாய்ப்பு முகவர்கள் தொடர்பாக தினமும் பல முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. ... அந்த முறைப்பாடுகள் மீது

சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் முறைகேடுகளில் ஈடுபடும் முகவர்களின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கைள் எடுக்கப்பட்டுள்ளன. உரிய பதிவுகள் இல்லாத முகவர்கள் மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-6)

## அநுர...

பினர் தயாசிறி ஜயசேகர விமர்சித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியின் செயலாளரால் 2025 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி சுற்று நிருபம் ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் வெளிநாட்டுத் தூதுவர்களோ வெளிநாட்டுகளில் இருந்து விசேட அதிகாரிகளோ வரும்போது அவர்களுடன் இடம்பெறும் கலந்துரையாடலை வெளிவிவகார அமைச்சக அதிகாரி ஒருவர் அங்குவந்து அதனைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அதேபோன்று ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவோ அல்லது ஒப்பந்தம் தொடர்பில் கலந்துரையாடவோ எந்தவொரு அமைச்சருக்கும் ஆளுநருக்கும் அதிகாரம் இல்லை. அதேபோன்று வெளிநாட்டு தூதுவர்கள் அல்லது வெளிநாட்டு அதிகாரிகளால் விடுக்கப்படும் இராப்போசன நிகழ்வு மற்றும் விழாக்களுக்கான அழைப்புகளை அமைச்சர்கள் யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் இருக்கும் வெளிநாட்டுத் தூதுவர்கள் அமைச்சர்களைச் சந்திப்பதாக இருந்தால், அதற்கு வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்து நேரம் ஒதுக்கிக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சுற்று நிருபத்தை பார்க்கும்போது சிரிப்பும் வருகிறது. அதேநேரம் கவலையாகவும் இருக்கிறது. ஏனெனில் இவ்வாறான கட்டுப்பாடுகள் வடகொரியாவில் கூட இல்லை - என்றார். (அ-ம)

## செல்லம்...

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழ்த் தேசியக் கட்சி உட்பட 7 பங்காளிக் கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணியாக செயற்பட்டு வருகின்றது. தற்போது இந்தக் கூட்டணிக்கு இணைத் தலைமைகளாக ஒவ்வொரு கட்சியின் தலைவர்களையும் உள்ளடக்கிய கட்டமைப்பே செயற்பட்டு வருகின்றது.

எனினும் கடந்த வாரம் வவுனியாவில் இடம்பெற்ற கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின்போது ஒற்றைத் தலைமையின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டணியை செயற்பட வைப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் இடம்பெறவுள்ள மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனை தலைவராக நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கலாநிதி' சர்ச்சை சி.ஐ.டி. அழைப்பு

கொழும்பு, ஜன.15
நாடாளுமன்ற இணையதளத்தில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார வின் பெயருக்கு முன்னால் கலாநிதிப் பட்டம் குறிப்பிடப்பட்டமை தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காக நாடாளு மன்ற ஊழியர்கள் பலர் குற்றப் புல னாய்வுத் திணைக்களத்துக்கு இன்று அழைக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற பதிவு அலுவலகத்தின் உயர் அதிகாரி உட்பட பலர் அழைக்கப் பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகி றது. முன்னதாக, சம்பந்தப்பட்ட சம்ப வம் தொடர்பாக வாக்குமூலம் பெறுவ தற்காக நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவுப் பணிப்பாளர் உட்பட பலர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அத்தோடு, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதி காரிகளும் நாடாளுமன்றத்துக்குச் சென்று அதிகாரிகள் சிலரிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவுசெய்திருந்த னர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# 'தூய இலங்கை' திட்டம் முன்மொழிவு சமர்ப்பிக்கலாம்

கொழும்பு, ஜன.15
தூய இலங்கைத் திட்டம் தொடர்பாக செயற்படுத்தப்பட வேண்டிய புதிய நட வடிக்கைகள் குறித்து அனைத்து அமைச்சகங்களிடமிருந்தும் முன்மொ ழிவுகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கோரியுள்ளார்.

இதுதொடர்பாக, ஒவ்வொரு அமைச்சகத் திலும் வெவ்வேறு குழுக்கள் நியமிக்கப் படவுள்ளது டன் தற்போது அமைச்சகங் களால் செயற்படுத்தப்படும் திட்டங்களுக்குப் பதிலாக புதிய திட்டங் கள் இந்தத் திட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப் படவேண்டும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

புதிய திட்டங்கள் அடங்கிய அறிக்கை களை அனைத்து அமைச்சகங்களும் தயாரிக்கவேண்டும் என்றும், இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி ஒவ் வொரு அமைச்சகத்தையும் தனித்தனி யாக வரவழைக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



# வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் பக்திப் பாடல்களுடன் பொங்கல்

கொழும்பு, ஜன.15
வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் பக்திப் பாடல்கள் இசைக்க மழைக்கு மத்தியில் தைப்பொங்கல் திருநாள் சிறப்பாக நேற்றுக் கொண்டா டப்பட்டது. வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய சமுதாயப் பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் சிவில் பாதுகாப்பு குழுவினரின் பங்களிப்புடன் பொங்கல் இடம்பெற்றது. நிகழ்வில் மதத் தலைவர்கள், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரட்ண, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயக்கொடி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண் டனர். (ச-18)

## மரண அறிவித்தல்

மண்ணில் 07 . 08 . 1941



விண்ணில் 13 . 01 . 2025

### Dr. தம்பிராஜா குணசுந்தரம்

யாழ். குப்பிழானைப் பிறப்பிடமாகவும், லண்டன் UK ஐ வசிப்பிடமாகவும் கொண்ட Dr.தம்பிராஜா குணசுந்தரம் அவர்கள் நேற்றுமுன்தினம் (13.01.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா (ராசர் - சித்த வைத்தியர்) - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், ரஜினி அவர்களின் அன்புக் கணவரும், Dr.நிமலன், Dr.கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.அனுசா, Dr.சிவா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும், முத்துலிங்கம், காலஞ்சென்ற தவமலர், மற்றும் மகாலிங்கம், இரத்னசிங்கம், செல்வமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேந்திரன், ராஜேந்திரன், சரோஜினிதேவி, ரவிந்திரன், குலேந்திரன், புவனேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இசை, இனியா, ரோசா, அருவி, தென்றல் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:-
முத்துலிங்கம் (முத்து - கனடா) - +1(416) 556 1925,
மகாலிங்கம் (UK) - +44 794 757 2850,
செல்வமலர் (கனடா) - 905 997 0748,
ரத்கினசிங்கம் (கனடா) - 647 706 5851

(CS/29577) J-1

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 11 . 1945



மறைவு 13 . 01 . 2025

### டேவிட் லிகோரி
(மீரா பதிப்பாலயா உரிமையாளர் மற்றும் எழுத்தாளர்)

யாழ்ப்பாணம் வேம்படி வீதியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட டேவிட் லிகோரி அவர்கள் நேற்றுமுன்தினம் (13.01.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப் கபிரியேல் டேவிட்-எலிசபேத் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற டேவிட் அன்ரனி மற்றும் அருள்மலர், செல்வி, டேவிட் மரிய நாயகம் ஆகியோரின் சகோதரரும், றிச்சேட் ராமு, புவனேஸ்வரன், அன்ரனி பொன்மலர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பற்றிசியா அனற் (தாதிய உத்தியோகத்தர்), ஆன் நிறோஜினி (ஆசிரியர்), ஜெனற்கரோலின் (சிங்கப்பூர் - கணக்காளர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பத்மரூபன் (தாதிய உத்தி யோகத்தர்), தேவராஜ் (லொஜிஸ்ரிக் உத்தியோகத்தர் - சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும், ஆன்பமிலா (லண்டன்), சர்மிளா (திருகோணமலை), ஊர்மிளா (திருகோணமலை), டொனால் (லண்டன்), டினேஸ் (திருகோணமலை), பிரசன்னா (லண்டன்), மடோனா (லண்டன்), மரினா (லண்டன்), சரோமினி (லண்டன்), சிரோமினி (லண்டன்) ஆகியோரின் சிறிய தந்தையும், திலக்ஷிகா, சாத்விகா, அன்ரனி, சோபினாத், சோபியானா, சயூரன், கிறிஸ்ரிகா, சயில்விகா, திவிஸ்கா, கருசினி, தச்சாயினி, மெர்லின், ஏனோக், மிருசாகினி, மிஸ்ரிகா, கேசிகா, ஆரோன், ஆதிஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.01.2025) புதன்கிழமை அவரின் இல்லத்தில் இருந்து பிற்பகல் 03.00 மணியளவில் யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

721 வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.

(CS/29581) J-1

தகவல்:
குடும்பத்தினர்
076 404 2437


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் ... (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ... வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.